<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்</u>

<u>முன்னிலை</u> : திருமதி. கா. ஸ்ரீபதி, B.A., L.L.B.,

நீதித்துறை நடுவர், வாணியம்பாடி.

2026ம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் நாள் செவ்வாய்கிழமை

<u>சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்.469/2018.</u>

<u>சி.என்.ஆர். எண்.TNTU09-000764-2018</u>

வரிசை எண்.1	விளக்கம்	விவரங்கள்
1.	குற்றமுறையிடுபவர்	M.முருகன் த/பெ.முனிசாமி, எண்.286, மாரியம்மன் கோயில் தெரு, நியூ டவுன், வாணியம்பாடி.
2.	எதிரி	R.யூகா த/பெ. ரங்கன், எண்.567, 37 வது தெரு, சத்துவாச்சாரி, வேலூர் மாவட்டம்.
3.	குற்றம்	138 NI ACT
4.	சம்பவம் நடந்த தேதி	27.06.2018
5.	முதல் தகவல் அறிக்கை பதிவு/முறையீடு செய்யப்பட்ட நாள்	25.10.2018
6.	எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள்	-
7.	குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்	-
8.	கு.வி.மு.ச.பிரிவு 138-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள்	10.10.2025
9.	கு.வி.மு.ச.பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யபட்ட விவரம் அதன் முடிவுகள்.	-
10	வழக்கின் சாட்சி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்	பு.த.சா.1 - 12.01.2026, 04.03.2026, 27.03.2026 எ.த.சா.1 - 22.05.2026
11	எதிரியிடம் குற்றம் குறித்து	21.04.2026

	கு.வி.மு.ச.313(1) (பி)–ன் கீழ் வினவிய நாள்	
12	எதிரி மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள்	–
13	தீர்ப்பு பகரப்பட்ட நாள்	30.06.2026
14	தீர்வு	கு.வி.மு.ச.பிரிவு 255(2)ன் கீழ் தண்டனை

<u>நீதித்துறை படிவம் எண். 61</u>

புகார்தாரர் : M.முருகன் த/பெ.முனிசாமி.

எதிரி : R.யூகா த/பெ. ரங்கன்.

குற்றம் : 138 NI ACT

முடிவு : கு.வி.மு.ச பிரிவு 255 (2) ன் கீழ் தண்டனை

தண்டனை: முடிவாக, குற்றஞ்சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138 ன் கீழ் குற்றவாளி என தீர்மானிக்கப்பட்டு, மேற்படி குற்றத்திற்கு மூன்று மாத காலம் மெய்க்காவல் சிறை தண்டனை குற்றஞ்சாட்டபட்டவர் அனுபவிக்க வேண்டும் என்றும், குற்றஞ்சாட்டபட்டவர் (காசோலை தொகை ரூ.10,00,000 + செலவுத் தொகை ரூ.10,000) மொத்தம் ரூ.10,10,000/– குற்றமுறையீட்டாளருக்கு நஷ்ட ஈடாக கு.வி.மு.ச 357(3) ன் கீழ் ஒரு மாதத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில், மேலும், 2 மாதங்கள் மெய்க்காவல் சிறை தண்டனை குற்றஞ்சாட்டபட்டவர் அனுபவிக்க வேண்டுமென்று கு.வி.மு.ச பிரிவு 255 (2) ன் கீழ் தண்டித்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது.

வரிசை எண்	எதிரியின் பெயர்	தந்தை/ கணவர் பெயர்	சாதி (அ) இனம்	தொழில்	முகவரி	வயது
1.	R.யூகா	ரங்கன்	–	–	எண்.567, 37 வது தெரு, சத்துவாச்சாரி, வேலூர் மாவட்டம்.	45

தேதி							தாமதம் (ம) அதன் விளக்கம்
குற்றம்	புகார் அறிக்கை	எதிரி கைது செய்யப்பட்ட நாள்	பிணையில் சென்ற நாள்	வழக்கு விசாரணையின் தொடக்கம்	வழக்கு விசாரணையின் முடிவு	உத்தரவு	...
27.06.18	25.10.18	–	–	10.10.25	21.04.26	30.06.26	–

இவ்வழக்கு கடந்த 20.11.2018 ஆம் தேதியன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு இறுதியாக 21.04.2026 அன்று விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. K.ரஞ்சித்குமார், B.Com., B.L., திரு. S. கமலக்கண்ணன், B.Sc., B.L., திரு.சுப்புரமணியன், M.A., M.Phil., B.L., R.திவ்யா, B.Com., L.L.B., அவர்கள் முன்னிலையாகியும், குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.G.கோவிந்தராஜ், B.A., B.L., திரு.வி.நடனசிகாமணி,B.Com., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இது நாள் வரையில் பரிசீலனையில் இருந்து வந்து, வழக்கின் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

தீர்ப்புரை

இவ்வழக்கு குற்றமுறையீட்டாளர் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச் சட்டம் படி தண்டிக்க கோரி கு.வி.மு.ச பிரிவு 200 ன் கீழ் தனிநபர் குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. வழக்கின் சுருக்கம்

குற்றம்சாட்டபட்டவரும் குற்றமுறையிடுபவரும் நெருங்கிய நண்பர்கள் என்ற அடிப்படையில் வீட்டை பழுதுபார்த்து தருவதாகக் கூறி 03.08.2017ம் தேதி ரூபாய் 10,00,000/–ஐ (பத்து லட்சம்) ரொக்கமாக பெற்றுக்கொண்டு வீட்டை பழுது பார்க்காமலும், கடனை திருப்பி தராமல் இருந்ததாகவும், பலமுறை திருப்பி கேட்டபோது, 27.06.2018 தேதியிட்டு ரூ.10,00,000/– த்திற்கு ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, ஆபிஸர்

லைன், வேலூர் கிளையில் பெறத்தக்க தலா ரூ.10,00,000/–க்கான 143947 என்ற எண் கொண்ட காசோலையை பூர்த்தி செய்து மனுதாரரிடம் ஒப்டைத்ததாகவும், மனுதாரர் காசோலையை பணமாக்க 20.07.2018ம் தேதி தன்னுடைய வங்கி கணக்குள்ள ஆந்திரா வங்கி, சத்தியமூர்த்தி நகர் கிளையில் தாக்கல் செய்ததாகவும், வங்கி கணக்கு இருப்பில் போதிய பணம் இல்லை (Funds Insufficient) எனக்கூறி வங்கியினரால் 21.07.2018 ம் தேதி பணமாகாமல் ரிட்டன் மெமோ உடன் திருப்பப்பட்டதாகவும், மீண்டும் 2 மாதம் கழித்து செலுத்துமாறு கூறியதாகவும், அதன்படி கடந்த 19.09.2018ம் தேதியில் தன்னுடைய வங்கி கணக்குள்ள இந்தியன் வங்கி, வாணியம்பாடி கிளையில் தாக்கல் செய்ததாகவும், மீண்டும் வங்கி கணக்கு இருப்பில் போதிய பணம் இல்லை **(Funds Insufficient)** எனக்கூறி வங்கியினரால் 20.09.2018 ம் தேதி பணமாகாமல் ரிட்டன் மெமோ உடன் திருப்பப்பட்டதாகவும், கடந்த 24.09.2018ம் தேதி குற்றம்சாட்டப்பட்டவருக்கு சட்ட அறிவிப்பு வழக்கறிஞர் மூலம் அனுப்பியதாகவும், விலாசம் தவறு என 26.09.2018ல் திருப்பப்பட்டதாகவும், மீண்டும் சரியான முகவரிக்கு 28.09.2018ல் அந்த அறிவிப்பை அனுப்பியதாகவும், ஆனால் **" Intimation served not claimed return to sender"** என பதிவு தபால் மூலம் 09.10.2018ல் வந்துவிட்டதாகவும், எவ்வித பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை. மேலும், இன்றைய தேதி வரை குற்றம்சாட்டப்பட்டவர் காசோலை தொகையை கொடுக்கவில்லை என்றும் குற்றம்சாட்டப்பட்டவர் மீது மாற்று முறை ஆவணச் சட்டம், பிரிவு 138 ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக குற்றமுறையீட்டாளார் தனிநபர் குற்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட வேண்டிய வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு. 204ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டன. வழக்கின் புகார் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் இவ்வழக்கிற்கான அடிப்படை முகாந்திரம் இருந்ததால் இந்த நீதிமன்றம் போதிய கால அவகாசம் வழங்கிய பின்னர் குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் 1881 ஆம் ஆண்டு மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138

ன் கீழ் குற்றம் குறித்து வினாவிய போது குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றவாளி இல்லை எனவும், நான் காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

3. எனவே, குற்றமுறையீட்டாளர் தரப்பு வழக்கினை நிரூபிக்க சாட்சியங்கள் அழைக்கப்பட்டது. குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றமுறையீட்டாளர் சாட்சி பு.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, பு.த.சா.ஆ.1 முதல் பு.த.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4) குற்றமுறையீட்டாளர் சாட்சியத்தின் சுருக்கம்:–

பு.த.சா.1 குற்றமுறையிடுபவரான முருகன் தனது சாட்சியத்தில், புகாரில் கூறியுள்ள சங்கதிகளையே நீதிமன்ற சாட்சியத்திலும் கூறியிருக்கிறார். மேலும், 27.06.2018 ம் தேதியிட்ட ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, வேலூர் கிளையின் 143947 என்ற எண்ணுள்ள ரூ.10,00,000 க்கான காசோலை அசல் பு.த.சா.ஆ.1 என்றும், 21.07.2018 ம் தேதியிட்ட ஆந்திரா வங்கி, சத்தியமூர்த்தி நகர் கிளையின் ரிட்டன் மெமோ பு.த.சா.ஆ.2 என்றும், 20.09.2018 ம் தேதியிட்ட இந்தியன் வங்கி, வாணியம்பாடி வங்கி ரிட்டன் மெமோ பு.த.சா.ஆ.3 என்றும், 24.09.2018 ம் தேதியிட்ட எதிரிக்கு வழங்கப்பட்ட சட்ட அறிவிப்பு அலுவலக நகல் பு.த.சா.ஆ.4 என்றும், 26.09.2018 ம் தேதியிட்ட குற்றம்சாட்டப்பட்டவர் அறிவிப்பினை பெற்றுக்கொள்ளாமல் திருப்பபட்ட அஞ்சலக உறை பு.த.சா.ஆ.5 என்றும், 09.10.2018 ம் தேதியிட்ட Intimation served not claimed Return to sender என சட்ட அறிவிப்பினை பெற்றுக்கொள்ளாமல் திருப்பபட்ட அஞ்சலக உறை பு.த.சா.ஆ.6 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5. இவ்வழக்கில் கு.வி.மு.ச பிரிவு 313(1)(பி) ன் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிரான சாட்சியங்களை குறித்து கேள்வி கேட்டபோது, அவர் தரப்பில் சாட்சிகள் உண்டு எனவும், பொய் சாட்சி, பொய் வழக்கு என கூறியுள்ளார். இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் ஜெகனீஷ், வங்கி உதவி மேலாளர் எ.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் எ.த.சா.ஆ.1 சான்றாவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குற்றமுறையிடுபவர் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் வாதங்கள் முன்வைக்கப்பட்டன. சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் இந்நீதிமன்றம் இவ்வழக்கை தீர்மானிக்கிறது.

6. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்

1. இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழ் குற்றம்சாட்டப்பட்டுள்ளதா?

2. குற்றம்சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 118 மற்றும் 139ன் கீழ் அனுமானத்தை மறுத்து அவர் தரப்பு சாட்சியத்தை முன்வைத்துள்ளாரா?

6(i). இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழ் குற்றம்சாட்டப்பட்டுள்ளதா?

இவ்வழக்கில் மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழ் குற்றத்தை உருவாக்க பின்வரும் கூறுகள் இருக்க வேண்டும்.

அ. புகார்தாரருக்கு ஆதரவாக குற்றம்சாட்டப்பட்டவரால் காசோலை கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆ. சட்டப்பூர்வமான கடன் அல்லது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக குற்றம்சாட்டப்பட்டவரால் காசோலை வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

இ. காசோலை கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து 3 மாதங்களுக்கும் அல்லது அதன் செல்லுபடியாகும் காலத்திற்குள் வங்கியில் சமர்பிக்கப்பட வேண்டும்.

ஈ. காசோலை வங்கியால் திருப்பப்பட்டிருக்க வேண்டும்.

உ. காசோலை திருப்பப்பட்ட தகவல் கிடைத்த 30 நாட்களுக்குள் பணம் பெறுபவர் அல்லது வைத்திருப்பவர் காசோலை கொடுத்தவருக்கு எழுத்துபூர்வமாக ஒரு அறிவிப்பை வழங்கி காசோலையை கொடுத்தவர் அந்த தொகையை செலுத்த வேண்டும் என கோரிக்கை வைத்திருக்க வேண்டும் .

ஊ. சட்டபூர்வ அறிவிப்பு கிடைத்த நாளிலிருந்து 15 நாட்களுக்குள் காசோலையை கொடுத்தவர் காசோலை தொகையை செலுத்த தவறியிருக்க வேண்டும்.

எ. புகார்தாரரர் அந்த 15 நாட்கள் காலாவதியானதிலிருந்து 1 மாதத்திற்குள் நீதிமன்றத்தை அணுகியிருக்க வேண்டும்.

மேலே கூறப்பட்ட கூறுகள் திருப்தி அடைந்தால் மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 118 மற்றும் 139ன் கீழ் உள்ள அனுமானங்கள் நடைமுறைக்கு வரும்.

" Affirmanti non neganti incumbit probatio " நிரூபிக்கும் பொறுப்பு குற்றம்சாட்டுபவரிடமே உள்ளது.

<u>7. குற்றமுறையிடுபவர் தரப்பு சாட்சியத்தின் சுருக்கம்:—</u>

7(i). இவ்வழக்கில் குற்றமுறையிடுபவர் பு.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் பு.த.சா.ஆ.1 முதல் பு.த.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பு.த.சா.ஆ.1 27.06.2018 ம் தேதியிட்ட ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, வேலூர் கிளையின் 143947 என்ற எண்ணுள்ள ரூ.10,00,000 க்கான காசோலை அசல் பற்றியதாகும், பு.த.சா.ஆ.2 21.07.2018 ம் தேதியிட்ட ஆந்திரா வங்கி, சத்தியமூர்த்தி நகர்

கிளையின் ரிட்டன் மெமோ அசலின் காரணம் **" போதிய பணம் இல்லை "** என்று குறிப்பிடப்பட்டுள்ளது, பு.த.சா.ஆ.3 20.09.2018 ம் தேதியிட்ட இந்தியன் வங்கி, வாணியம்பாடி வங்கி ரிட்டன் மெமோ அசலின் காரணம் **" போதிய பணம் இல்லை "** என்று குறிப்பிடப்பட்டுள்ளது பற்றியதாகும், பு.த.சா.ஆ.4 24.09.2018 ம் தேதியிட்ட எதிரிக்கு வழங்கப்பட்ட சட்ட அறிவிப்பு அலுவலக நகல் பற்றியதாகும், பு.த.சா.ஆ.5 26.09.2018 ம் தேதியிட்ட குற்றம்சாட்டப்பட்டவர் அறிவிப்பினை பெற்றுக்கொள்ளாமல் திருப்பபட்ட அஞ்சலக உறை பற்றியதாகும், பு.த.சா.ஆ.6 09.10.2018 ம் தேதியிட்ட **Intimation served not claimed Return to sender** என சட்ட அறிவிப்பினை பெற்றுக்கொள்ளாமல் திருப்பபட்ட அஞ்சலக உறை பற்றியதாகும்.

7(ii). ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது இந்த நீதிமன்றம் புகார்தாரருக்கு காசோலை வழங்கப்பட்டுள்ளது என்றும், அது ஆந்திரா வங்கி சத்தியமூர்த்தி நகர் கிளை மற்றும் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, வாணியம்பாடி கிளையால் **" போதிய பணம் இல்லை "** என்று திருப்பப்பட்டது என்றும், பின் புகார்தாரர் சட்டபூர்வ அறிவிப்பை குற்றம்சாட்டப்பட்டவருக்கு அனுப்பியுள்ளார் என்பதை தீர்மானிக்கிறது.

7(iii) பு.த.சா.ஆ.4 முதல் பு.த.சா.ஆ.6னை பரிசீலனை செய்து பார்க்கும் போது குற்றம்சாட்டப்பட்டவர் சட்ட அறிவிப்பை பெற்ற நாளிலிருந்து 30 நாள்களுக்குள் பணத்தை செலுத்தவில்லை எனவும், அதனால் தான் குற்றமுறையிடுபவர் குற்றம்சாட்டப்பட்டவருக்கு எதிராக அறிவிப்பை பெற்ற ஒரு மாதத்திற்குள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே புகார்தாரர் தரப்பில் மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 138 பிரிவின் கீழ் உள்ள கூறுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என இதன் மூலம் இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய முதல் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

7(iv). மேலும், புகார்தாரர் அவரது குறுக்கு விசாரணையில் " பணம் கொடுத்தேன், அவர் பணம் திரும்ப கொடுக்கவில்லை, வீடும் கட்டி தரவில்லை. எனவே, பணத்தை திரும்ப

கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் திருப்பத்தூர் இந்தியன் வங்கி கிளையில் சீப் காசோலை கேசியராக பணிபுரிந்து 2010ல் பணிஓய்வு பெற்றேன். ஆஜர் எதிரியை எனக்கு எப்படி தெரியும் என்றால் அவர் எனது நீண்ட கால நண்பர். நான் பணி ஓய்வு பெற்றபின் மாதம் எவ்வளவு வருவாய் வரும் என்றால் ரூ.42,000/- வரும். வீட்டு செலவு போக ஒரு மாதத்திற்கு என்னிடம் எவ்வளவு பணம் இருக்கும் என்றால் ரூ.25,000/- இருக்கும். எனது வங்கிக்கணக்கில் எவ்வளவு தொகை உள்ளது என்றால் ரூ.20,00,000/-ற்குமேல் வைத்திருப்பேன், எனது ஓய்வு பணம். 2017ல் ரூ.20,00,000/- இருந்ததற்கான வங்கி கணக்கு விவரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன், ஆனால், அதை எடுத்து கையில் வீடு கட்டுவதற்காக வைத்திருந்தேன். எனது ஓய்வூதிய பணத்தை நான் வங்கியில் வைத்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் எதிரிக்கு எவ்வளவு ரூபாய் கொடுத்தேன் என்றால் 03.08.2017ம் தேதி வீடு கட்டித்தருவதாக உறுதி அளித்ததால் ரூ. 10,00,000/- என் வீட்டில் வைத்து கொடுத்தேன். வீடு கட்டுவதற்கு ஒப்பந்தம் ஏதேனும் போட்டுக்கொண்டோமா என்றால் நம்பிக்கையின் அடிப்படையில் கொடுத்தேன், அதற்கு பதிலாக காசோலை வாங்கிக்கொண்டேன். ரூ.10,00,000/- பெரிய தொகை என்றால் சரிதான். நான் பணம் கொடுத்த உடனேயே காசோலை கொடுத்தாரா என்றால் இல்லை, (ஆனால் முதலில் சாட்சி ஆமாம் என கூறினார்.) ரூ.10,00,000/- கொடுத்ததற்கு ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. நான் எதிரியிடம் ரூ.10,00,000/- கொடுத்தத்றகாக கட்டிடம் கட்டுவதற்கு ஒப்பந்தமோ பாண்டோ எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. நான் எழுதி கொடுத்தால் தான் பணம் கொடுப்பேன் என மறுப்பு தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நான் எனது புகாரில் கைம்மாற்றாக பெற்றுக்கொண்டார் என கூறியுள்ள நிலையில் கடனாக தான் அவர் பெற்றுக்கொண்டார் என்றால் இல்லை, வீடு கட்டுவதற்காக வாங்கினார். வீடு கட்டுவதற்காக தான் பணம் கொடுத்தது குறித்து ஆதாரம் எதுவும் இல்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் காசோலையை எங்கு யார் கொடுத்தார்கள் என்றால் எதிரியே வாணியம்பாடி நியூடவுனிலுள்ள என் வீட்டில் வைத்து கொடுத்தார். காசோலையில் உள்ள சங்கதிகளை யார் நிரப்பியது என்றால் எதிரியே நிரப்பி

கொடுத்தார். காசோலையில் உள்ள கையெழுத்து யாருடையது என்றால் எதிரியினுடையது. பூர்த்தி செய்யாத காசோலை மட்டும் தான் எதிரியினுடையது என்றாலும், காசோலையிலுள்ள தேதி, எண்கள், கையெழுத்து எதுவும் எதிரியினுடையது அல்ல என்றால் 27.06.2018ல் எதிரி தான் கைப்பட எழுதி ரூ.10,00,000/-ற்கு ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, ஆபிசர் லைன், வேலூர் எனற காசோலை எண்143947 என்பதை எழுதிக்கொடுத்தார். காசோலையை எதிரி எனக்கு எப்போதும் கொடுக்கவில்லை என்றாலும், அவர் அலுவலகத்தில் பணிபுரியும் போது மோசடியாக காசோலை எடுத்து காசோலையை நானே நிரப்பிக்கொண்டேன் என்றாலும் சரியல்ல, எதிரி அலுவலகத்தில் நான் வேலை செய்யவில்லை. காசோலையில் இருப்பது ஆஜர் எதிரியின் கையொப்பம் இல்லை என்றாலும், அது என்னால் மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. நான் எதிரிக்கு எப்படி ரூ.10,00,000/- கொடுத்தேன் என்றால் வீடு கட்டுவதற்காக எனது ஓய்வு பணத்தை வைத்திருந்தேன், நகை கொஞ்சம் வைத்திருந்தேன், என் மகன் பணம் கொடுத்ததை வைத்து கொடுத்தேன். 2010ல் ஓய்வு பெற்றுவிட்டு 2017ம் ஆண்டு வரை அந்த பணத்தை பத்திரமாக வைத்திருந்தேன் என்றால் அதை வைத்து நகை வாங்கினேன், அதை மனைவியிடம் கொடுத்தேன், அடகு வைத்து கொடுத்தேன். அடகு வைத்ததற்கான ஆதாரம் உள்ளதா என்றால் உள்ளது. அடகு வைத்ததற்கான ஆதாரத்தை நீதிமன்றத்தில் சமர்பிக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். 03.08.2017ம் தேதியன்று இவ்வழக்கின் ஆஜர் எதிரியின் மனைவிக்கு அன்றைய தினம் ரூ.5,00,000/- கொடுத்ததாக காசோலை வழக்கு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கு எண் எஸ்.டி.சி.எண்.470/2018 என்றால் சரிதான். ஒரே நாளில் ரூ.15,00,000/- வந்ததற்கான ஆதாரம் உள்ளதா என்றால் கையிருப்பாக ரூ.30,00,000/- வைத்திருந்தேன். ரூ.30,00,000/- கையிருப்பாக வைத்திருந்ததற்கு ஆவண சாட்சி எதுவும் இல்லை என்றால் சரிதான். காசோலை எதற்காக திருப்பப்பட்டது என்றால் போதிய பணம் இல்லை என திருப்பப்பட்டது. காசோலையில் உள்ள கையெழுத்து எதிரியுடையது அல்ல என்றாலும், அதை வங்கியிலுள்ள எதிரியின் கையொப்பத்துடன் ஒப்பிட்டு பார்க்கும்போது காசோலையில் உள்ள கையொப்பம் என்னால் போலியாக மோசடியாக

போடப்பட்டது என தெரியவருகிறது என்றால் சரியல்ல. எதிரி வீடு கட்டுவதற்காக என்னிடம் எந்த ஒப்பந்தமும் போடவில்லை என்றாலும், என்னிடம் அவர் பணம் வாங்கவில்லை என்றாலும், அவர் அந்த கடனுக்காக எனக்கு காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. ஆஜர் எதிரி எந்த விலாசத்தில் வசிக்கிறார் என்றால் 567, சத்துவாச்சாரியில் வசித்து வருகிறார். அவர் பல வீடுகள் மாறுவதால் என்னால் எதிரியின் விலாசத்தை குறிப்பிட்டு கூற முடியாது என்றால் முடியும், தற்போது அவர் தரணீஸ்புரம், அம்பேத்கர் நகர், காட்பாடியில் வசிக்கிறார். எதிரிக்கு நான் அனுப்பிய முதல் அறிவிப்பு சேம்பள்ளி குடியாத்தம் முகவரிக்கு அனுப்பினேன் என்றால் சரிதான். அது தவறான விலாசம் என திரும்ப வந்துவிட்டது. பின் 2வது அறிவிப்பை 567, சத்துவாச்சாரி முகவரிக்கு அனுப்பினேன் என்றால் சரிதான். வங்கிக்கு சென்று தான் எதிரிக்கு அனுப்பிய 2வது முகவரியை கண்டுபிடித்தேன் என்றால் சரியல்ல, 3 முறை அவரது சத்துவாச்சாரி முகவரிக்கு சென்றுள்ளேன். அதனால் எதிரி அங்கு தான் உள்ளார் என தெரியும் என்றாலும், வங்கியில் சென்று கேட்கவில்லை என்றாலும் சரிதான். புகார்வாக்குமூலத்திலும், முதன்மை சாட்சியத்திலும் எதிரியின் விலாசத்தை வங்கியில் கேட்டு அவர்கள் கொடுத்த முகவரிக்கு தான் 2 வது அறிவிப்பு 28.09.2018 ம் தேதி அனுப்பினேன் என கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல, அது சரிதான். எதிரி கொடுத்த காசோலை முதல் முறை திருப்பப்பட்டதை எதிரியிடம் கேட்டபோது அவர் இரண்டு மாதம் கழித்து மீண்டும் தாக்கல் செய்யுமாறு கூறியதை எங்கு வைத்து கூறினார் என்றால் எதிரியின் வீடான வீட்டு கதவு எண். 567, 37 வது தெரு, சத்துவாச்சாரி இல்லத்தில் வைத்து சொன்னார். இரண்டாவது முறையாக திருப்பப்பட்டதை குறித்தும் அவரது வீட்டில் தான் சென்று கேட்டேன் என்றால் சரிதான். இரண்டாவது முறை எந்த வீட்டில் சென்று கேட்டேன் என்றால் வீட்டு கதவு எண். 567, 37 வது தெரு, சத்துவாச்சாரி இல்லத்தில் போய் கேட்டேன். நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் சட்ட அறிவிப்பை எதிரிக்கு எப்போது அனுப்பினேன் என்றால் 24.09.2018. விலாசம் சரியில்லை என அதை வாங்க மறுத்துவிட்டார். நான் சொல்வது அப்பட்டமான பொய் என்றாலும் 2017 முதல் 2022 ம் வரை சத்துவாச்சாரி EPF office அருகில் பகுதி 3, சத்துவாச்சாரி, வேலூர் என்ற

முகவரியில் தான் எதிரி வசித்து வந்தார் என்றால் அதைநான் பார்க்கவில்லை. நான் எதிரியை மேற்சொன்ன வீட்டு கதவு எண். 567, 37 வது தெரு, சத்துவாச்சாரி முகவரியில் எதிரியை வசிக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல, அங்கு தான் பார்த்தேன். முதல் குறுக்கு விசாரணையின் போது பர்னீஸ்புரம், அம்பேத்கர் நகர் வீட்டில் எதிரியை பார்த்ததாக சொல்லியுள்ள நிலையில் எத்தனை வருடங்களுக்கு முன்பு பார்த்தேன் என்றால் நினைவில்லை, அவர் பல விலாசத்தில் வசித்து வருகிறார். பர்னீஸ்புரத்தில் வசித்து வருவது எத்தனை வருடத்திற்கு முன்பு தெரியும் என்றால் இரண்டு வருடத்திற்கு முன்பு தெரியும். வழக்கில் எதிரியின் மீது பிடியாணை இருந்த போது எதிரி பர்னீஸ்புரம் முகவரியில் இருப்பதாக நான் எதாவது மெமோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, ஆனால் அவர் எந்தெந்த முகவரியில் வசித்தாரோ அங்குள்ள துணைகாவல் கண்காணிப்பாளர் அலுவலகங்களில் மனுக்கொடுத்துள்ளேன். எதிரி 2022 ல் இருந்து காட்பாடி முகவரியில் வசித்து வருகிறார் என்றாலும் அதற்கு முன்பு சத்துவாச்சாரி EPF office அருகில் வசித்து வந்தார் என்றாலும் நான் பொய்யான முகவரியை கொடுத்து எதிரியின் மீது பிடியாணை வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட பிடியாணையின் உத்தரவின் பேரில் தான் 19.09.2025 ம் தேதி நீதிமன்றத்தில் எதிரிக்கு தகவல் கிடைத்து அவர் தானாகவே ஆஜர் ஆனார் என்று சொன்னால் சரியல்ல. நான் மனுக்கொடுத்தேன். சரியான முகவரிக்கு அறிவிப்பு சார்பாக காரணத்தில் தான் அறிவிப்பு திருப்பபட்டது என்றால் சரியல்ல, அவர் அடிக்கடி வேறு ஒரு முகவரியில் வசித்து வருவார். பணத்தை வசூல் செய்வதற்காக உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அறிவிப்பு மற்றும் புகார் அனைத்திலும் எதிரியின் பெயர் யுகா என்று மட்டும் தான் குறிப்பிட்டு உள்ளேன் என்றால் சரிதான். காசோலையில் யுகா சின்னசாமி R என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். எதிரியின் பெயர் முழுமையாக நான் கூறவில்லை என்றால் விலாசத்தில் முழுமையாக கூறியுள்ளேன். எதிரியின் பெயரை தவறாக குறிப்பிட்டுள்ளதால் இந்த வழக்கே செல்லதக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் வங்கியில் மோசடி செய்து அதன் பேரில் நடவடிக்கை எடுத்து தான் நான் வேலையில் இருந்து வெளியேறினேன் என்றால் சரியல்ல. என் மகன் வேலை

செய்யவில்லை என்றாலும் அவர் வேலைக்கு எதுவும் செல்லவில்லை என்றாலும் சரியல்ல. எனக்கு ஒரே நாளில் 15 லட்சம் கடன் கொடுப்பதற்கு எனக்கு எந்த வித வசதியும் இல்லை என்றாலும் கடன் கொடுத்தேன் என்று சொல்வதற்கு ஆவண சாட்சியம் இல்லை என்றாலும் அவரது வழக்கு காசோலையை பூர்த்தி செய்யாமல் இருந்ததை நானே மோசடியாக பூர்த்தி செய்து அவரை போல கையொப்பம் இட்டு இந்த வழக்கை அவருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் காசோலையில் உள்ள கையொப்பத்தை எதிரியின் வங்கியில் உள்ள மாதிரி கையொப்பத்துடன் ஒப்பிட்டு பார்த்தால் தான் தெரியும் என்றால் வங்கியில் இருந்து போதிய பணம் இல்லை என்றுதான் திருப்பப்பட்டதே தவிர கையொப்பம் மாறுப்பட்டதாக எதுவும் கூறவில்லை. வங்கியின் மேலாளரை விசாரித்தால் தான் உண்மை தெரியவரும் என்றால் விசாரித்துக்கொள்ளலாம். இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல. " என சாட்சியமளித்துள்ளார்.

இத்துடன் குற்றமுறையிடுபவர் தரப்பு சாட்சியங்கள் முடித்து வைக்கப்பட்டுள்ளது.

8. **குற்றம்சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 118 மற்றும் 139ன் கீழ் அனுமானத்தை மறுத்து அவர் தரப்பு சாட்சியத்தை முன்வைத்துள்ளாரா?**

மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழ் குற்றங்களுக்கான வழக்குகளில் நிரூபிக்கும் சுமை குற்றம்சாட்டப்பட்டவர் மீது உள்ளது. **மாண்புமிகு உச்சநீதிமன்ற வழக்கான பசலிங்கப்பா எதிர் முதிபசப்பா (2019) 6 SCR 555 118 மற்றும் 139 அனுமானங்கள் குறித்த கொள்கைகளை சுருக்கமாக கூறுகிறது.**

மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 118a மற்றும் 139 ன் அனுமானங்கள் பின்வருமாறு:

அ. மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 139 ஆனது காசோலை ஏதேனும் கடன் அல்லது பிற பொறுப்பை நிறைவேற்றுவதற்காக கொடுத்திருக்க வேண்டும் என்ற அனுமானத்தை கட்டாயமாக்குகிறது.

ஆ. பிரிவு 139ன் கீழ் உள்ள அனுமானமானது மறுக்கத்தக்க அனுமானமாகும். சாத்தியமான வாதத்தை எழுப்பும் பொறுப்பு குற்றம்சாட்டப்பட்டவரின் மீது உள்ளது. அனுமானத்தை மறுப்பதற்கான சாட்சியத்தின் தரநிலை நிகழ்தகவுகளின் அதிகளவு (preponderance of Probabilities) ஆகும்.

9(i). இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 118(a) மற்றும் 139 ன் கீழ் உள்ள அனுமானங்களை மாற்றுமுறை ஆவண சட்டத்தின் படி மறுத்துள்ளாரா என்பதை பரிசீலனை செய்து பார்க்கும்போது குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் சாட்சி எ.த.சா.1 விசாரிக்கப்பட்டுள்ளார்.

9(ii). இவ்வழக்கில் ஜெகனீஷ், வங்கி உதவி மேலாளர் எ.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவரது நீதிமன்ற சாட்சியத்தில் " நான் தற்போது வேலூர் பாரத ஸ்டேட் வங்கி கிளையில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அழைப்பானை வந்ததின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எதை குறித்து சாட்சியம் அளிக்கவேண்டும் என அதில் குறிப்பிட்டு இருந்தது. இவ்வழக்கில் யுகா சின்னசாமி என்பவரின் கையெழுத்து வேறுபட்டு இருப்பதாக கூறி அவரது வங்கியில் உள்ள கையெழுத்து படிவம் கொண்டு வந்துள்ளேன். அந்த படிவத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உள்ளேன். **எதிரியின் வங்கியில் உள்ள கையெழுத்து அடங்கிய சான்றிட்ட படிவம் எ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. புகார்தாரர் தரப்பில் குறியீடு செய்வதற்கு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. இவ்வழக்கில் உள்ள காசோலையில் R என இனிசியல் உள்ளது. ஆனால் எங்கள் வங்கியில்இனிசியல் குறிப்பிட்டு அவர் கையெழுத்து செய்துக்கொடுக்கவில்லை. அதுவே நாங்கள் பெரிய வேறுபாடாக தான் வங்கியில்

பார்த்தோம். எங்கள் வங்கியை பொறுத்த வரை வங்கியில் உள்ள கையெழுத்தும் காசோலையில் உள்ள கையெழுத்தும் ஒத்துபோகவில்லை என்றால் அந்த காசோலை திருப்பபடும். ரிட்டன் மெமோவில் சிக்னேசர் மிஸ்மேச் என குறிப்பிடாமல் போதிய பணம் இல்லை என திருப்பபட்டதற்கான காரணம் குறித்து எனக்கு தெரியாது. சென்னையில் உள்ள CCPC அலுவலகத்தில் கேட்டால் தான் தெரியும். எதிரியின் வங்கிகணக்கு எண் 11392965551. வங்கிகணக்காளரின் பெயர் யுகா சின்னசாமி R என்ற உள்ளது. யுகா என்று தனியாக குறிப்பிடவில்லை. " என சாட்சியமளித்துள்ளார்.

9(iii). புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணையின்போது "எதிரி எந்த தேதியில் எங்கள் வங்கியில் வங்கி கணக்கு தொடங்கினார் என்றால் அதுக்குறித்த தகவல் நான் கொண்டு வரவில்லை. பெசிமண்ட் சிக்னேசர் வங்கி கணக்கு தொடங்கும்போது போட்டாரா என்றால் ஆமாம். பெசிமண்ட் சிக்னேசர் பற்றி எங்கள் வங்கியில் உள்ள கையெழுத்து நிபுணரிடம் கருத்துரை பெற்று வந்தேனா என்றால் அதுப்போன்று யாரும் எங்கள் வங்கியில் இல்லை. யுகா சின்னசாமி எங்கள் வங்கியில் வாடிக்கையாளர் என்றால் சரிதான். எங்கள் வங்கியில் இருந்து எங்கள் வாடிக்கையாளருக்கு கொடுத்த காசோலை என்னிடம் தற்போது காட்டப்படும் காசோலை என்றால் சரிதான். அந்த காசோலையில் உள்ள காசோலை எண் எதிரிக்கு சொந்தமானது என்றால் சரிதான். காசோலையில் இனிசியல் தான் இல்லை என்றாலும் அந்த கையெழுத்தில் எந்த மாற்றமும் இல்லை என்று சொன்னால் நாங்கள் அதை பெரியதாக பார்ப்பதில்லை. சிறிய வேறுபாடு இருந்தாலும் அது எங்கள் வங்கியால் திருப்பப்படும். 2018 ல் எதிரியின் காசோலையை ஆந்திரா வங்கியில் செலுத்தும் போது அந்த வங்கியில் இருந்து எங்கள் வங்கிக்கு காசோலை வசூலுக்காக எங்கள் வங்கிக்கு செலுத்தும் போது போதிய பணம் இல்லை என்று தான் எங்கள் வங்கியால் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்கள் வங்கியில் கையெழுத்து தவறாக உள்ளது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். CCPC அலுவலகத்திற்கு தான் தெரியும். அவர் ஆந்திரா வங்கியில் திருப்பப்பட்டதால் எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்தியன் வங்கியில் செலுத்தியபோதும் காசோலையானது போதிய பணம் இல்லை என்றுதான்

திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். எ.த.சா.ஆ 1 ல் உள்ள எதிரியின் கையெழுத்தில் P,R எனகுறிப்பிட்டுள்ளதா என என்னால் அறுதியிட்டு கூற முடியுமா என்றால் அந்த இரண்டு ரவுண்டு சீல் முறையே உள்ளது தான் கையெழுத்து. எ.த.சா.ஆ 1 ல் உள்ள எதிரியின் கையெழுத்தில் சீல் வைத்துள்ளது என்றால் பொதுவாக கையொப்பமாக இருந்தாலும், புகைப்படமாக இருந்தாலும் சீல் வைப்பது வழக்கம். சீல் வைத்தால் இனிசியல் மறைந்திருக்கலாம் என்றால் சரியல்ல. கையொப்பம் வேறுபாடுக்குறித்து என்னால் எந்த முடிவையும் என்னால் கூறமுடியாது என்றால் சரியல்ல.இரண்டு ரவுண்டு சீல் இடையே உள்ளது தான் கையொப்பம் என்பது என்னுடைய கணிப்பு. எ.த.சா.ஆ 1 ல் அசலை நீதிமன்றத்தில் கொண்டு வரவில்லை என்றால் 10 வருடத்திற்கு பிறகு காலக்கெடு முடிந்த பிறகு ஆவணங்களை அழித்துவிடுவோம். அந்த ஆவணங்களை அழிப்பதற்கு முன்பு நகல் எடுக்கப்பட்ட ஆவணம் எதையும் நான் கொண்டு வரவில்லை என்றால் சரிதான். கையெழுத்து நிபுணருக்கு அனுப்பினால் தான் கையெழுத்தில் R உள்ளதா, P உள்ளதா என கூறமுடியுமா என்றால் எங்கள் கணிப்பைதான் கூறினேன். நான் கொண்டுவந்துள்ள ஆவணங்கள் எ.த.சா.ஆ 1 கணினி மூலம் பதிவிறக்கப்பட்டு இருப்பதாலும் அதை ஆவணமாக ஏற்றுக்கொள்ளமுடியாது என்று சொன்னால் அதை வைத்து தான் முடிவெடுத்தோம். எதிரியிடம் இருந்து அவரது காசோலை காணாமல் போனதாக எந்த ஒரு கடிதமும் வங்கிக்கு வரவில்லை என்று சொன்னால் அதுக்குறித்து எனக்கு தெரியாது. எதிரியிடம் இருந்து வங்கி கணக்கை நிறுத்திவைக்க எந்த கோரிக்கையும் வரவில்லை என்றால் வரவில்லை. காசோலையில் கையொப்பம் வேறுபாட்டு இருந்தால் மறுநாளே வாடிக்கையாளருக்கு வங்கியை அனுகும் மாறு கடிதம் அனுப்புவோம் என்றால் எங்கள் வங்கி காசோலைக்கு மட்டும் தான் கடிதம் அனுப்புவோம். மற்ற வங்கி காசோலையாக இருந்தால் ரிட்டன் மெமோ அனுப்புவோம். இன்று வரை எதிரி எங்கள் வங்கியில் வாடிக்கையாளராக இருந்து வருகிறார் என்றால் சரிதான் " என சாட்சியமளித்துள்ளார்.

10. இரு தரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

11. குற்றமுறையீட்டாளர் சார்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது மாற்றுமுறை ஆவண சட்டப் பிரிவு 138 ன் கீழான ஆக்கக்கூறுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டிருப்பதாகவும், வழக்கு காசோலைக்குண்டான பணம் தர மறுக்கப்பட்டதிலிருந்து குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு 30 நாட்களுக்குள் அறிவிப்பு செய்ததாகவும், குற்றஞ்சாட்டப்பட்டவர் அறிவிப்பை பெற்றுக்கொண்டு காசோலைக்குண்டான பணத்தை குற்றஞ்சாட்டப்பட்டவர் செலுத்தவில்லை, எவ்வித பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை. எனவே குற்றமுறையீட்டாளர் உரிய காலத்திற்குள் இவ்வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும், எனவே, குற்றமுறையீட்டாளர் தரப்பில் முறையான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது சாட்டப்பட்ட 1881 ம் ஆண்டு மாற்று முறை ஆவணச் சட்டம் பிரிவு 138 ன் கீழான குற்றத்திற்கான ஆக்கக்கூறுகள் அனைத்தும் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டிருப்பதனால், இக்குற்றத்திற்கு குற்றஞ்சாட்டப்பட்டவரை தண்டித்தும் காசோலைக்குண்டான பணத்தை திருப்பி குற்றமுறையீட்டாளருக்கு வழங்கி உத்தரவிட வேண்டும் என வாதிடப்பட்டுள்ளது.

12. இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும், குற்றமுறையிடுபவருக்கு காசோலை குற்றம்சாட்டப்பட்டவர் கொடுக்கவில்லை என்றும், கடன் எதுவும் வாங்கவில்லை என்றும், இவ்வழக்கில் எதிரியின் கையொப்பம் மாறுபட்டு இருப்பதால் இவ்வழக்கில் இருந்து எதிரியை விடுதலை செய்து உத்தரவிட வேண்டுமென வாதிட்டார்.

13. **இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது சாட்டப்பட்டுள்ள மாற்றுமுறை ஆவணச்சட்ட பிரிவு 138 ன் கீழான குற்றமானது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதாகும்.**

14. இவ்வழக்கின் குற்றமுறையிடுபவரான முருகன் என்பவரிடமிருந்து குற்றம்சாட்டப்பட்டவர் வீட்டை பழுதுபார்த்து தருவதாகக் கூறி 03.08.2017ம் தேதி ரூபாய் 10,00,000/-ஐ (பத்து லட்சம்) ரொக்கமாக பெற்றுக்கொண்டு வீட்டை பழுது பார்க்காமலும், கடனை திருப்பி தராமல் இருந்ததாகவும், பலமுறை திருப்பி கேட்டபோது, 27.06.2018 தேதியிட்டு ரூ.10,00,000/- த்திற்கு ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, ஆபிஸர் லைன், வேலூர் கிளையில் பெறத்தக்க தலா ரூ.10,00,000/-க்கான 143947 என்ற எண் கொண்ட காசோலையை பூர்த்தி செய்து மனுதாரரிடம் ஒப்டைத்ததாகவும், மனுதாரர் காசோலையை பணமாக்க 20.07.2018ம் தேதி தன்னுடைய வங்கி கணக்குள்ள ஆந்திரா வங்கி, சத்தியமூர்த்தி நகர் கிளையில் தாக்கல் செய்ததாகவும், வங்கி கணக்கு இருப்பில் போதிய பணம் இல்லை (Funds Insufficient) எனக்கூறி வங்கியினரால் 21.07.2018 ம் தேதி பணமாகாமல் ரிட்டன் மெமோ உடன் திருப்பப்பட்டதாகவும், மீண்டும் 2 மாதம் கழித்து செலுத்துமாறு கூறியதாகவும், அதன்படி கடந்த 19.09.2018ம் தேதியில் தன்னுடைய வங்கி கணக்குள்ள இந்தியன் வங்கி, வாணியம்பாடி கிளையில் தாக்கல் செய்ததாகவும், மீண்டும் வங்கி கணக்கு இருப்பில் போதிய பணம் இல்லை **(Funds Insufficient)** எனக்கூறி வங்கியினரால் 20.09.2018 ம் தேதி பணமாகாமல் ரிட்டன் மெமோ உடன் திருப்பப்பட்டதாகவும், கடந்த 24.09.2018ம் தேதி குற்றம்சாட்டப்பட்டவருக்கு சட்ட அறிவிப்பு வழக்கறிஞர் மூலம் அனுப்பியதாகவும், விலாசம் தவறு என 26.09.2018ல் திருப்பப்பட்டதாகவும், மீண்டும் சரியான முகவரிக்கு 28.09.2018ல் அந்த அறிவிப்பை அனுப்பியதாகவும், ஆனால் **" Intimation served not claimed return to sender"** என பதிவு தபால் மூலம் 09.10.2018ல் வந்துவிட்டதாகவும், எவ்வித பதில் அறிவிப்பும் அனுப்பாமல், இன்றைய தேதி வரை குற்றம்சாட்டப்பட்டவர் காசோலை தொகையை கொடுக்கவில்லை என்பதும், மேலும், 27.06.2018 ம் தேதியிட்ட ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, வேலூர் கிளையின் 143947 என்ற எண்ணுள்ள ரூ.10,00,000 க்கான காசோலை அசல் பு.த.சா.ஆ.1 என்பதும், 21.07.2018 ம் தேதியிட்ட ஆந்திரா வங்கி, சத்தியமூர்த்தி நகர் கிளையின் ரிட்டன் மெமோ பு.த.சா.ஆ.2 என்பதும், 20.09.2018 ம் தேதியிட்ட இந்தியன் வங்கி, வாணியம்பாடி வங்கி ரிட்டன் மெமோ பு.த.சா.ஆ.3

என்பதும், 24.09.2018 ம் தேதியிட்ட எதிரிக்கு வழங்கப்பட்ட சட்ட அறிவிப்பு அலுவலக நகல் பு.த.சா.ஆ.4 என்பதும், 26.09.2018 ம் தேதியிட்ட குற்றம்சாட்டப்பட்டவர் அறிவிப்பினை பெற்றுக்கொள்ளாமல் திருப்பபட்ட அஞ்சலக உறை பு.த.சா.ஆ.5என்பதும், 09.10.2018 ம் தேதியிட்ட **Intimation served not claimed Return to sender** என சட்ட அறிவிப்பினை பெற்றுக்கொள்ளாமல் திருப்பபட்ட அஞ்சலக உறை பு.த.சா.ஆ.6 என்பதும், இன்றைய தேதி வரையிலும் காசோலைக்குண்டான தொகையை குற்றமுறையீட்டாளருக்கு அளிக்கவில்லை என்பதும், எனவே குற்றமுறையீட்டாளர் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக வழக்கு தொடுத்திருக்கிறார் என்பதும், குற்றமுறையீட்டாளர் தரப்பில் தக்க சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலம் மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 கீழான ஆக்கக் கூறுகளை நிரூபித்து உள்ளதாக இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

14(i). மேலும், புகார்தாரர் அவரது குறுக்கு விசாரணையில் " நான் எதிரிக்கு எவ்வளவு ரூபாய் கொடுத்தேன் என்றால் 03.08.2017ம் தேதி வீடு கட்டித்தருவதாக உறுதி அளித்ததால் ரூ. 10,00,000/- என் வீட்டில் வைத்து கொடுத்தேன் என்றும், நம்பிக்கையின் அடிப்படையில் கொடுத்தேன், அதற்கு பதிலாக காசோலை வாங்கிக்கொண்டேன் என சாட்சியம் அளித்துள்ள நிலையில் அதனை நிரூபணம் செய்வதற்காக இவ்வழக்கின் பு.த.சா.ஆ.1ஐ தாக்கல் செய்துள்ளார் என்றும், 27.06.2018 ம் தேதியிட்ட ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா காசோலையை, ஆந்திரா வங்கி, மற்றும் இந்தியன் வங்கி கிளையில் வசூலுக்கு போட்டபோது என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டது என்றால் குற்றம்சாட்டப்பட்டவர் கணக்கில் **"போதிய பணம் இல்லை"** என்ற காரணத்திற்காக 21.07.2018 மற்றும் 20.09.2018 ம் தேதிகளில் திருப்பப்பட்டது என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில் அதனை நிரூபணம் செய்வதற்காக பு.த.சா.ஆ.2 மற்றும் பு.த.சா.ஆ.3ஐ தாக்கல் செய்துள்ளார். கடனை திருப்பி கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பியதாக சொல்லியுள்ள நிலையில் பு.த.சா.ஆ.4 ஐயும், எதிரி அதனை பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்டது என்பதை நிரூபிக்கும் வகையில் பு.த.சா.ஆ.5 மற்றும் பு.த.சா.ஆ.6 ஐயும் தாக்கல் செய்துள்ளார். எனவே, இவ்வழக்கில்

புகார்தாரர் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துள்ளார் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

14(ii) இவ்வழக்கில் எதிரி தரப்பில் புகார்தாரரிடமிருந்து எதிரிக்கு வழங்கப்பட்ட அறிவிப்பானது சரியான முறையில் சென்றடையவில்லை என்றும் தவறான முகவரிக்கு அனுப்பப்பட்டது என்று வாதிடப்பட்ட நிலையில் பு.த.சா.1 அவரது குறுக்கு விசாரணையில் அவர் சரியான முகவரிக்கு அறிவிப்பை அனுப்பினேன் என்றும், எதிரி அடிக்கடி முகவரியை மாற்றிக்கொண்டே இருப்பார் என தெளிவாக பதில் அளித்துள்ளார். மேலும், எதிரி தரப்பில் புகார்தாரர் தவறான முகவரிக்கு அறிவிப்பை அனுப்பினார் என்று நிரூபிக்க வேண்டிய சுமை (Burden of Proof) எதிரிக்கு மாறும் நிலையில் அதுபோன்று எதிரி தரப்பில் எவ்விதமான ஆவணத்தையோ அல்லது சரியான முகவரியுடைய சான்றுகளையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ஆனால் புகார்தாரரால் தாக்கல் செய்துள்ள பு.த.சா.ஆ.6 ஆன 09.10.2018 ம் தேதியிட்ட **Intimation served not claimed Return to sender** என சட்ட அறிவிப்பினை பெற்றுக்கொள்ளாமல் திருப்பபட்ட அஞ்சலக உறையை நீதிமன்றம் பரிசீலனை செய்து பார்க்கும்போது எதிரிக்கு அறிவிப்பு சார்வாகி உள்ளது என்றும் அதை அவர் பெற்றுக்கொள்ளாமல் திருப்பி விட்டார் என்றும் தெளிவாக உள்ளதால் எதிரிக்கு அறிவிப்பு சார்வாகவில்லை என தீர்மானிக்க முடியாது. ***Section 27 of the general clauses act 1897–கீழ்*** ஒரு கடிதம் அல்லது அறிவிப்பு சரியான முகவரியிடப்பட்டு உரிய அஞ்சல் கட்டணம் செலுத்தப்பட்டு பதிவு தபால் மூலம் அனுப்பப்பட்டால் அது உரிய நபரை சென்றடைந்ததாகவே நீதிமன்றம் கருதும் **(Deemed Service).** மேலும், **பிரிவு 114 இந்திய சாட்சிய சட்டம்** அன்றாட அலுவலக மற்றும் தபால் முறைகள் சரியான முறையில் நடந்திருக்கும் என்று நீதிமன்றம் அனுமானிக்க **(May persume) வழிவகை செய்கிறது. எனவே** அந்த அறிவிப்பு சரியான முறையில் சென்று அடைந்ததாகவே இவ்வழக்கில் நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே,

இவ்வழக்கில் புகார்தாரர் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துள்ளார் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

14(iii). **சட்டப்பிரிவு 139ன் கீழ் புகார்தாரர் ஒரு காசோலையை கடனை தீர்ப்பதற்காகவே பெற்றார் என்று நீதிமன்றம் கருதவேண்டும். இதை பொய் என நிரூபிக்க வேண்டிய பொறுப்பு (Burden Of Proof) குற்றம் சாட்டப்பட்டவரையே சாரும்.**

14(iv). மேலும், குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் புகார்தாரரின் குற்றச்சாட்டை மறுக்கும் விதமாக சாட்சி எ.த.சா.1 விசாரணை செய்யப்பட்டுள்ளார். மேலும், எ.த.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

15. குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பு சாட்சி புகார்தாரரின் குற்றச்சாட்டை சந்தேகத்திற்கிடமின்றி மறுத்துள்ளார்களா?

16. எ.த.சா.1 ஜெகனீஷ், வங்கி உதவி மேலாளர் அவரது நீதிமன்ற சாட்சியத்தை பரிசீலணை செய்து பார்க்கும்போது " இவ்வழக்கில் யுகா சின்னசாமி என்பவரின் கையெழுத்து வேறுபட்டு இருப்பதாக கூறி அவரது வங்கியில் உள்ள கையெழுத்து படிவம் கொண்டு வந்துள்ளேன் என்றும், அந்த படிவத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உள்ளேன் என்றும், இவ்வழக்கில் உள்ள காசோலையில் R என இனிசியல் உள்ளது. ஆனால் எங்கள் வங்கியில் இனிசியல் குறிப்பிட்டு அவர் கையெழுத்து செய்துக்கொடுக்கவில்லை. என்றும், ரிட்டன் மெமோவில் சிக்னேசர் மிஸ்மேச் என குறிப்பிடாமல் போதிய பணம் இல்லை என திருப்பபட்டதற்கான காரணம் குறித்து எனக்கு தெரியாது என்றும், சென்னையில் உள்ள CCPC அலுவலகத்தில் கேட்டால் தான் தெரியும். எதிரியின் வங்கிகணக்கு எண் 11392965551. வங்கிகணக்காளரின் பெயர்யுகா சின்னசாமி R என்ற உள்ளது. யுகா என்று தனியாக குறிப்பிடவில்லை என்றும், பெசிமண்ட் சிக்னேசர் வங்கி கணக்கு தொடங்கும்போது போட்டாரா என்றால் ஆமாம் என்றும், பெசிமண்ட் சிக்னேசர் பற்றி எங்கள் வங்கியில் உள்ள கையெழுத்து நிபுணரிடம் கருத்துரை பெற்று வந்தேனா என்றால்

அதுப்போன்று யாரும் எங்கள் வங்கியில் இல்லை என்றும், யுகா சின்னசாமி எங்கள் வங்கியில் வாடிக்கையாளர் என்றால் சரிதான் என்றும், **எங்கள் வங்கியில் இருந்து எங்கள் வாடிக்கையாளருக்கு கொடுத்த காசோலை என்னிடம் தற்போது காட்டப்படும் காசோலை என்றால் சரிதான் என்றும், அந்த காசோலையில் உள்ள காசோலை எண் எதிரிக்கு சொந்தமானது என்றால் சரிதான் என்றும்,** காசோலையில் இனிசியல் தான் இல்லை என்றாலும் அந்த கையெழுத்தில் எந்த மாற்றமும் இல்லை என்று சொன்னால் நாங்கள் அதை பெரியதாக பார்ப்பதில்லை. சிறிய வேறுபாடு இருந்தாலும் அது எங்கள் வங்கியால் திருப்பப்படும். **2018 ல் எதிரியின் காசோலையை ஆந்திரா வங்கியில் செலுத்தும் போது அந்த வங்கியில் இருந்து எங்கள் வங்கிக்கு காசோலை வசூலுக்காக எங்கள் வங்கிக்கு செலுத்தும் போது போதிய பணம் இல்லை என்று தான் எங்கள் வங்கியால் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்றும், எங்கள் வங்கியில் கையெழுத்து தவறாக உள்ளது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான் என்றும், அவர் ஆந்திரா வங்கியில் திருப்பப்பட்டதால் எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்தியன் வங்கியில் செலுத்தியபோதும் காசோலையானது போதிய பணம் இல்லை என்றுதான் திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்றும்,** எ.த.சா.ஆ 1 ல் உள்ள எதிரியின் கையெழுத்தில் P,R என குறிப்பிட்டுள்ளதா என என்னால் அறுதியிட்டு கூற முடியுமா என்றால் அந்த இரண்டு ரவுண்டு சீல் முறையே உள்ளது தான் கையெழுத்து. எ.த.சா.ஆ 1 ல் உள்ள எதிரியின் கையெழுத்தில் சீல் வைத்துள்ளது என்றால் பொதுவாக கையொப்பமாக இருந்தாலும், புகைப்படமாக இருந்தாலும் சீல் வைப்பது வழக்கம் என்றும், சீல் வைத்தால் இனிசியல் மறைந்திருக்கலாம் என்றால் சரியல்ல என்றும், கையொப்பம் வேறுபாடுக்குறித்து என்னால் எந்த முடிவையும் என்னால் கூறமுடியாது என்றால் சரியல்ல என்றும், இரண்டு ரவுண்டு சீல் இடையே உள்ளது தான் கையொப்பம் என்பது என்னுடைய கணிப்பு. எ.த.சா.ஆ 1 ல் அசலை நீதிமன்றத்தில் கொண்டு வரவில்லை என்றால் 10 வருடத்திற்கு பிறகு காலக்கெடு முடிந்த பிறகு ஆவணங்களை அழித்துவிடுவோம். அந்த ஆவணங்களை அழிப்பதற்கு முன்பு நகல் எடுக்கப்பட்ட ஆவணம் எதையும் நான் கொண்டு வரவில்லை என்றால் சரிதான். கையெழுத்து நிபுணருக்கு அனுப்பினால் தான் கையெழுத்தில் R உள்ளதா, P

உள்ளதா என கூறமுடியுமா என்றால் எங்கள் கணிப்பைதான் கூறினேன் என்றும், **எதிரியிடம் இருந்து அவரது காசோலை காணாமல் போனதாக எந்த ஒரு கடிதமும் வங்கிக்கு வரவில்லை என்று சொன்னால் அதுக்குறித்து எனக்கு தெரியாது என்றும்,** எதிரியிடம் இருந்து வங்கி கணக்கை நிறுத்திவைக்க எந்த கோரிக்கையும் வரவில்லை என்றால் வரவில்லை என்றும், காசோலையில் கையொப்பம் வேறுபாட்டு இருந்தால் மறுநாளே வாடிக்கையாளருக்கு வங்கியை அனுகும் மாறு கடிதம் அனுப்புவோம் என்றால் எங்கள் வங்கி காசோலைக்கு மட்டும் தான் கடிதம் அனுப்புவோம் என்றும், மற்ற வங்கி காசோலையாக இருந்தால் ரிட்டன் மெமோ அனுப்புவோம் என்றும், இன்று வரை எதிரி எங்கள் வங்கியில் வாடிக்கையாளராக இருந்து வருகிறார் என்றால் சரிதான் " என சாட்சியம் அளித்துள்ளார்.

16(i) அவரது சாட்சியத்தை பரிசீலணை செய்து பார்க்கும்போது காசோலை எதிரியின் உடையதுதான் என்பதை எ.த.சா.1 சாட்சியம் உறுதியூட்டும் விதமாக சாட்சியம் அளித்துள்ளார். அவர் கையெழுத்து மாறுபட்டதை குறித்து கணித்துதான் சொல்கிறேன் என சாட்சியம் அளித்துள்ளதாலும், புகார்தாரரல் தாக்கல் செய்ப்பட்ட ரிட்டர்ன் மெமோக்களான பு.த.சா.ஆ.2 மற்றும் பு.த.சா.ஆ.3ல் காசோலையானது போதிய பணம் இல்லை என்றுதான் திருப்பப்பட்டுள்ளதே தவிர கையெழுத்து மாறுபட்டுள்ளது என்று எங்கும் குறிப்பிடப்படவில்லை. எனவே எ.த.சா.1ன் சாட்சியம் குற்றம் சாட்டப்பட்டவரின் வழக்கை வலுசேர்க்கும் விதமாக அமையவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், அந்த காசோலை எதிரியுடையது அல்ல என்பதை நிரூபிக்கும் பொருட்டு சாண்றாவணங்களை எதிரி தரப்பில் தாக்கல் செய்யவில்லை. எதிரி தரப்பில் காசோலையில் உள்ள கையெழுத்து மோசடியாக போடப்பட்டுள்ளது என கூறியுள்ள நிலையில் காசோலையை மோசடியானது என்பதை நிரூபிக்க எவ்வித சட்ட நடவடிக்கைகளும் எதிரி தரப்பில் எடுக்கவில்லை என்பதும் அதற்கான ஆவணங்கள் எதுவும் எதிரி தரப்பில் தாக்கல் செய்யவில்லை என இந்நீதிமன்றத்திற்கு புலனாகிறது.

16(ii) இந்த வழக்கில் எதிரியின் கையொப்பம் மாறுபட்டுள்ளதால் அந்த காசோலையானது எதிரியின் உடையது அல்ல என்று எதிரி தரப்பில் நிரூபிப்பதற்காகதான் **எதிரியின் வங்கியில் உள்ள கையெழுத்து அடங்கிய சான்றிட்ட படிவம் எ.த.சா.ஆ 1 ஆனது நீதிமன்றத்தால் குறியீடு செய்யப்பட்டிருந்தாலும்** இந்த வழக்கில் பு.த.சா.ஆ.2 மற்றும் 3ஐ பரிசீலனை செய்து பார்க்கும்போது காசோலையானது திருப்பியதற்கான காரணம் " போதிய பணம் இல்லை " என்றுதான் திருப்பப்பட்டுள்ளது என்று தெளிவாக தெரிகிறது. மேலும் எதிரி தரப்பு வங்கி மேலாளரிடம் கையெழுத்து மாறுபாடு அல்லது இனிசியல் ஆகியவை வைத்து புகார்தாரின் குற்றச்சாட்டை மறுக்க சாட்சியம் அளித்திருந்தாலும்,

மாற்றுமுறை ஆவண சட்டப் பிரிவு 146-(Bank Slip prima facie evidence for certain facts) “The court shall, in respect of every proceedings under this chapter, on production of bank slips or memo having thereon the official mark denoting that the cheque has been dishonoured, presume the fact of dishonour of such cheque, unless and until such fact is disproved”

வங்கியின் ரிட்டர்ன் மெமோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்போது, அதில் குறிப்பிட்டுள்ள காசோலை மறுப்புக்கான காரணம் உண்மையான சட்ட அனுமானத்தை (Presumption) நீதிமன்றம் கொள்ள வேண்டும். எனவே இந்த வழக்கில் காசோலையில் உள்ள கையெழுத்து மற்றும் இனிசியல் குறித்து சாட்சியம் அளிக்கப்பட்டிருந்தாலும் வங்கியின் அதிகாரபூர்வ ஆவணமான ரிட்டர்ன் மெமோவில் "போதிய பணம் இல்லை என்று இருக்குமபோது எழுதப்பட்ட ஆவணமான ரிட்டர் மெமோவே மாற்றுமுறை ஆவண சட்டப் பிரிவுகள் 91 மற்றும் 92 இந்திய சாட்சிய சட்டத்தின் படி மேலோங்கியது என நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

16(iii) எ.த.சா.1 அவரது சாட்சியத்தில் கையெழுத்தில் சிறிய வேறுபாடுகள் இருந்தாலும் காசோலையை திருப்பிவிடுவோம் என்றும் இந்த வழக்கில் எதிரியின் கையெழுத்தை குறித்து கையெழுத்து நிபுணரின் கருத்தை பெறவில்லை என்றும், அது கணிப்பில் சொல்கிறேன் என சாட்சியம் அளித்துள்ளதால் அதுபோன்று கையெழுத்து மாறுபாடால் காசோலை திருப்படவில்லை என்பதாலும் எ.த.சா.1 ஆன வங்கி மேலாளரே

இவ்வழக்கில் உள்ள காசோலை எதிரியின் உடையது என்றும் அது போதிய பணம் இல்லை என்றுதான் திருப்பப்பட்டுள்ளது என்று ஒப்புக்கொண்டுள்ளதாலும், மேலும் மோசடியாக காசோலை தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ள நிலையில் அதற்காக சட்ட நடவடிக்கைகளோ அது மோசடியான காசோலை என்று நிரூபிக்க ஆவணங்கள் எதுவும் எதிரி தரப்பில் தாக்கல் செய்ய வில்லை என்பதாலும், **குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பு சாட்சி புகார்தாரரின் குற்றச்சாட்டை சந்தேகத்திற்கிடமின்றி மறுக்கவில்லை என நீதிமன்றம் கருதுகிறது.**

17 " Omnia Praesumuntur rite et solenniter esse acta " (அனைத்து அரசு அல்லது அதிகாரப்பூர்வ செயல்களும் முறையாகவும், சரியாகவும் செய்யப்பட்டதாகவே கருதப்படும்.)

17(i). மேலும், வங்கியின் ரிட்டர் மெமோ என்பது ஒரு முறையான ஆவணம் என்பதால் குற்றமுறையிடுபவர் தரப்பில் பு.த.சா.ஆ.2 மற்றும் பு.த.சா.ஆ.3 முறையான ஆவணமாக நீதிமன்றம் கருதுகிறது. பிரிவு 118 மற்றும் 139 மாற்றுமுறை ஆவணச்சட்டப்பிரிவின் கீழ் குற்றம்சாட்டப்பட்டவர் தனது தற்காப்பை நிரூபிக்க தவறிவிட்டார் என்பதால் குற்றம்சாட்டப்பட்டவரின் தரப்பு வாதம் வலுவிழந்து விட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

18. மேலும், குற்றம் சாட்டப்பட்டவரிடம் 313(1)(b) கேள்வி கேட்டபோது குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் சாட்சிகள் உண்டு எனவும், பொய் சாட்சி, பொய் வழக்கு என கூறியுள்ள நிலையில் குற்றம் சாட்டப்பட்டவர் அதை நிரூபிக்கும் வண்ணம் எவ்வித சான்றாவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. **மாண்புமிகு உச்சநீதிமன்ற வழக்கு ரங்கப்பா எதிர் ஸ்ரீமோகன் (2010) 11 SC வழக்கின்படி காசோலை வழங்கப்பட்டது ஒப்புக்கொள்ளப்பட்டாலோ அல்லது நிரூபிக்கப்பட்டாலோ விசாரணை நீதிமன்றம் திருப்பப்பட்ட காசோலையை உண்மையான சட்டப்பூர்வமான கடன் அல்லது நிறைவேற்ற கொடுக்கப்பட்டது என எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கூறுகிறது.**

மேலும், அவ்வாறு நிரூபிக்கப்பட்டால் அந்த அனுமானத்தை மறுத்து நிரூபிக்க வேண்டியது குற்றம்சாட்டப்படவரின் கடமை என கூறுகிறது.

18(i). ஆனால், எதிரி தனது முதல் கேள்வியில் குற்றம் குறித்து வினாவிய போது குற்றவாளி இல்லை எனவும், நான் காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்று கூறியுள்ளாரே தவிர பணம் எதுவும் வாங்கவில்லை என்று மறுத்து கூறவில்லை என்பதாலும், இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவரால் தான் காசோலையானது புகார்தாரருக்கு கொடுக்கப்பட்டது என புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதால் இவ்வழக்கின் காசோலையானது எதிரி வாங்கிய கடனுக்காக கொடுக்கப்பட்டதாகவே இந்நீதிமன்றம் அனுமானிக்கிறது. அந்த அனுமானத்தை குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி மறுத்து சாட்சியை விசாரணை செய்யப்பட்ட போதிலும் சாட்சி அதனை உறுதியூட்டும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை என்பதாலும், சான்றாவணங்களோ தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் இந்நீதிமன்றம் குற்றம்சாட்டப்பட்டவர் தனது கடமையை தவறவிட்டதாகவே நீதிமன்றம் கருதுகிறது.

18(ii). குற்றமுறையீட்டாளர் தரப்பு சாட்சியம், குற்றமுறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பு.த.சா.ஆ.1 முதல் பு.த.சா.ஆ.6 வரையுள்ள சான்றாவணங்கள் மூலம் குற்றமுறையீட்டாளர் தரப்பு வழக்கினை, குற்றமுறையீட்டாளர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138 ன் கீழ் குற்றம் புரிந்திருப்பது நிரூபிக்கப்பட்டிருப்பதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

18(iii). மேற்படி காரணங்கள், வழக்கின் பொருண்மைகள், சூழ்நிலைகள், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை கூர்ந்து பரிசீலனை செய்ததில், குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றஞ்சாட்டபட்டவர் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டு போதுமான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி மெய்ப்பிக்கபட்டிருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே குற்றஞ்சாட்டபட்டவர்

மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138ன் கீழ் குற்றவாளியாக இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. எனவே, குற்றஞ்சாட்டப்பட்டவரை மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 ன் கீழ் தண்டித்து தீர்ப்பளிக்க இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

19. இவ்வழக்கில் குற்றமுறையீட்டாளருக்கு கு.வி.மு.ச பிரிவு 357 ன் கீழ் இழப்பீடு வழங்க கோரப்பட்டுள்ளது. இவ்வழக்கில் மாற்றுமுறை ஆவணச் சட்ட பிரிவு 138 ன் கீழ் குற்றஞ்சாட்டபட்டவர் குற்றவாளி என தீர்மானிக்கபட்டதினால் குற்றமுறையீட்டாளர் இழப்பீடு பெற தகுதி உடையவர் ஆவார். வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும், குற்றமுறையீட்டாளருக்கு காசோலை தொகையான ரூ. 10,00,000 + செலவுத் தொகை ரூ.10,000/- மொத்தம் ரூ.10,10,000/-த்தை இழப்பீடாக குற்றமுறையீட்டாளருக்கு வழங்க உத்தரவிட இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

20. **முடிவாக,** குற்றஞ்சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138 ன் கீழ் குற்றவாளி என தீர்மானிக்கப்பட்டு, மேற்படி குற்றத்திற்கு மூன்று மாத காலம் மெய்க்காவல் சிறை தண்டனை குற்றஞ்சாட்டபட்டவர் அனுபவிக்க வேண்டும் என்றும், குற்றஞ்சாட்டபட்டவர் (காசோலை தொகை ரூ.10,00,000 + செலவுத் தொகை ரூ.10,000) மொத்தம் ரூ.10,10,000/- குற்றமுறையீட்டாளருக்கு நஷ்ட ஈடாக கு.வி.மு.ச 357(3) ன் கீழ் ஒரு மாதத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில், மேலும், 2 மாதங்கள் மெய்க்காவல் சிறை தண்டனை குற்றஞ்சாட்டபட்டவர் அனுபவிக்க வேண்டுமென்று கு.வி.மு.ச பிரிவு 255 (2) ன் கீழ் தண்டித்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் 2026 ஆம் வருடம் ஜூன் மாதம் 30 ஆம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிப்பார்க்கப்பட்டு, பின் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/-கா.ஸ்ரீபதி,

நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

இணைப்புகள்

குற்றமுறையிடுபவர் தரப்பு சாட்சிகள்

1.	பு.த.சா.1	திரு.முருகன்

குற்றமுறையிடுபவர் தரப்பு சான்றாவணங்கள்

1.	பு.த.சா.ஆ.1	27.06.2018 ம் தேதியிட்ட ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, வேலூர் கிளையின் 143947 என்ற எண்ணுள்ள ரூ.10,00,000 க்கான காசோலை அசல்.
2.	பு.த.சா.ஆ.2	21.07.2018 ம் தேதியிட்ட ஆந்திரா வங்கி, சத்தியமூர்த்தி நகர் கிளையின் ரிட்டன் மெமோ
3.	பு.த.சா.ஆ.3	20.09.2018 ம் தேதியிட்ட இந்தியன் வங்கி,வாணியம்பாடி வங்கி ரிட்டன் மெமோ
4.	பு.த.சா.ஆ.4	24.09.2018 ம் தேதியிட்ட எதிரிக்கு வழங்கப்பட்ட சட்ட அறிவிப்பு அலுவலக நகல்
5.	பு.த.சா.ஆ.5	26.09.2018 ம் தேதியிட்ட குற்றம்சாட்டப்பட்டவர் அறிவிப்பினை பெற்றுக்கொள்ளாமல் திருப்பபட்ட அஞ்சலக உறை.
6.	பு.த.சா.ஆ.6	09.10.2018 ம் தேதியிட்ட Intimation served not claimed Return to sender என சட்ட அறிவிப்பினை பெற்றுக்கொள்ளாமல் திருப்பபட்ட அஞ்சலக உறை.

குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு சாட்சி

1.	எ.த.சா.1	திரு.ஜெகனீஷ், வங்கி உதவி மேலாளர்.

குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு சான்றாவணங்கள்

1.	எ.த.சா.ஆ.1	எதிரியின் வங்கியில் உள்ள கையெழுத்து அடங்கிய சான்றிட்ட படிவம்.

குறிப்பு

1. வழக்கின் முடிவு குற்ற முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. கு.வி.மு.ச பிரிவு 204ன் கீழ் எதிரிக்கு இலவசமாக தீர்ப்பின் நகல் வழங்கப்பட்டது.

3. எதிரி கு.வி.மு.ச. பிரிவு 389 (3) மனுவின் பேரில் தண்டணை காலம் 1 மாத காலத்திற்கு நிறுத்தி வைக்கப்பட்டது.

ஒம்/–கா.ஸ்ரீபதி,
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

//உண்மை நகல்//

SRIPATHI K

JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI
Digitally signed by SRIPATHI K
Location: TIRUPATHUR

நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.